மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.13/2014

வாக்குமூலம். வா.சா. 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சச்சிதானந்தம் | ஜாதி | |
| த/பெ. | தங்கவேல் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 67 /2022 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 22-11-.2022 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டுமீண்டும் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

1) நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 2 ம் பிரதிவாதி இறந்து விட்டார் என்றால் சரிதான். அதனால் 2 ம் பிரதிவாதி எனது அனுபவத்தை தடை செய்யததாக சொன்னால் தவறு என்றால் 2 ம் பிரதிவாதி என் அனுபவத்தை தடை செய்யவில்லை. ஆனால் எனது வழக்குரையில் வழக்கு மூல காலத்தில் எல்லாப்பிரதிவாதிகளும் தடைசெய்ததாகத்தான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

2) அதனால் இறந்து போன நபர் தடை தகராறு செய்ததாக பொய்யாக வழக்குப் போட்டுள்ளதால் தாவா வழக்கிற்கு வழக்குமூலம் கிடையாது என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி இருந்து தான் தாவா சொத்தை பகிர்மானம் செய்து இருக்கிறார். பகிர்மானம் என்றால் என்னவென்றால் சொத்தை பங்கு வைத்துக் கொடுப்பது.

3) யாருக்கு 2 ம் பிரதிவாதி பகிர்மானம் செய்தார் என்றால் 2,3 பேருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். யார் யாருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் வேலு என்பவருக்கு சிவகாமி அம்மாள் கொடுத்துள்ளார்கள். சுப்பிரமணியனின் மனைவியும் அக்காவும் ஒரு இஸ்லாமியருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள்.

4) மேற்சொன்ன சுப்பிரமணியனின் அக்கா மற்றும் மேற்சொன்ன இஸ்லாமியரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லையென்றால் சரிதான். நான் என்ன பரிகாரத்திற்காக வழக்குப் போட்டுள்ளேன் என்றால் எங்கள் சொத்து

எங்களுக்கு வேண்டும் என்றும் சமீப காலத்தில் தான் எங்கள் சொத்தை கிரையம் கொடுத்துள்ளது தெரியவந்ததால் வழக்குப்போட்டுள்ளோம்.

5) நான் எப்போது கிரையம் கொடுத்ததை தெரிந்து கொண்டேன் என்றால் 2011 – 2012 ல் தெரிந்து கொண்டேன். 3 ம் பிரதிவாதி என்ன கட்சி செய்கிறார் என்று நான் படித்துப் பார்க்கவில்லை. 3 ம் பிரதிவாதி 28-06-2015 லேயே தனது கட்சியை தாக்கல் செய்து விட்டார் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் எனக்கு சொத்தில் உரிமை கிடையாது என்பதால் நா ன் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரியது தவறு என்று சொல்லியுள்ளார் என்றால் சொத்தில் எனக்கு உரிமை உள்ளது.

6) தாவா சொத்து எனக்கு உரிமை உள்ளது என்று உரிமை விளம்பல் பரிகாரம் கோரி நான் வழக்கு தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். மூன்று பிரிவினராக வந்து ஊடுருவ முயற்சித்தார்கள். அதனால் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரினேன். தாவா சொத்தில் எனக்கு உரிமையே கிடையாது என்பதால் நான் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. நான் காவல்துறையில் புகார் கொடுத்து அவர்கள் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளச் சொன்னார்கள்.

7) காவல்துறையில் புகார் கொடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்து இருக்கிறேன். எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. காவல் துறையில் புகார் கொடுத்தாக நான் சொல்வது பொய் என்றால் புகார் கொடுத்ததே அவர்கள் தான் அதில் தான் என்னை கூப்பிட்டு விசாரணை செய்தார்கள்.

8) வழக்குரையில் தாவா சொத்துக்கு செட்டில்மெண்ட் புல எண்ணும் நகர நில அளவை புல எண்ணும் குறிப்பிடவில்லையென்றால் சரிதான். அதனால் தாவா சொத்திற்கு எனக்கு புல எண் தெரியாது என்பதால் தான் செட்டில்மெண்ட் புல எண்ணும் நகர நில அளவை புல எண்ணும் குறிப்பிடப்படவில்லையென்றால் சரியல்ல . தாவா சொத்துக்கு எதன் அடிப்படையில் நான்கெல்லை குறிப்பிட்டுள்ளேன் என்றால் பக்கத்தில் உள்ளவர்கள் எனக்கு வேண்டியவர்கள் என்பதை வைத்து குறிப்பிட்டுள்ளேன். எனக்கு வேண்டியவர்கள் என்பதால் குறிப்பிட்டுள்ளேனா என்றால் பொதுவாக பக்கத்தில் உள்ளவர்கள் எனக்கு வேண்டியவர்கள் உறவுக்காரர்கள் என்பதால் குறிப்பிட்டுள்ளேன்.

9) 5-04-1934 ஆம் தேதிய கிரையப்பத்திரத்தின் படி யார் கிரையம் பெற்றது

என்றால் எனது அம்மாவின் அம்மா கிரையம் பெற்றார். வா.சா.ஆ. 3 ஆவணத்தின் அசல் எங்கு உள்ளது என்றால் அசல் மழையில் நனைந்து அழிந்து விட்டது. எப்போது மழையில் நனைந்து அழிந்தது என்றால் 2010 ஆம் ஆண்டு அழிந்து விட்டது.

10) மேற்படி அசல் பத்திரம் என் கைக்கு எப்போது வந்தது என்றால் 2005 ஆம் ஆண்டு வந்தது. எனது பாட்டி பெயர் காத்தாயியம்மாள் . காத்தாயியம்மாள் எந்த வருடம் இருந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. காத்தாயியம்மாளின் மகள் எனது தாயார் சம்பூர்ணத்தம்மாள் ஆவார். சம்பூர்ணத்தம்மாளுக்கு மொத்தம் 5 பிள்ளைகள் அவர்கள் பெயர் கணேசன், சுப்பிரமணியன், வீரப்பன், பஞ்சாபகேசன், மற்றும் என்னையும் சேர்த்து 5 பேர்கள்.

11) காத்தாயியம்மாள் இறப்பதற்கு முன்பே எனது சகோதரர் கணேசன் இறந்து விட்டாரா என்றால் இல்லை. அவர்கள் இறந்த பிறகு தான் இறந்தார். காத்தாயியம்மாள் இறந்து 20 வருடம் கழித்து தான் 2011 ல் வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் கண்ட வாரிசுகள் தற்போது உயிருடன் தான் இருக்கிறார்கள் என்றால் வா.சா.ஆ.2 ல் கண்ட கனகவள்ளி , சுப்பிரமணியன், வீரப்பன், ஆகியோர் இறந்து விட்டார்கள். மற்றவர்கள் உயிருடன் தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 கிரைய ஆவணத்தை கண்ட சொத்துக்களையும் தாவா சொத்துக்களையும் ஒப்பீடு செய்ய ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான்.

12) வா.சா.ஆ. 4 ஆவணம் எதைப்பற்றிய பத்திரம் என்றால் தாவா சொத்திலேயே மற்றொரு பகுதியை எனது பாட்டியும் அவரது சகோதரியும் சேர்ந்து வாங்கிய பத்திரம். வா.சா.ஆ. 4 ல் கண்ட சொத்து தான் தாவா சொத்து என்பதை காட்ட நீதிமன்ற ஆணையர் நியமணம் கோர வில்லையென்றால் சரிதான். வா.சா.ஆ.3 ,4, ஆவணங்களில் கண்ட சொத்துக்கும் தாவா சொத்துக்கும் சம்மந்தம் இல்லையென்பதால் தான் நான் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரவில்லையென்றால் சரியல்ல.

13) நான் பிராதில் தாவா சொத்தை ஆதியில் அறந்தாங்கியைச் சேர்ந்த முருகையாப்பிள்ளை, மகாலிங்கம் பிள்ளை அனுபவம் செய்து வந்ததாக நான் சொல்லியிருப்பதற்கு எழுத்துப் பூர்வமான ஆவணம் தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் இல்லை. அதனால் தாவா 1வது அயிட்டச் சொத்து ஆதியில் மகாலிங்கம் பிள்ளை முருகையாபிள்ளைக்கு சொந்தம் என்று நான் சொல்வது பொய் என்றால்

சரியல்ல.

14) 05-04-1934 ஆம் தேதி தாவா சொத்தை பழனியாண்டி பிள்ளை மனைவி செல்லத்தம்மாள் என்பவர் மகாலிங்கம் பிள்ளை முருகையாபிள்ளையிடம் இருந்து கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் நான் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான்.

15) அதனால் மேற்படி செல்லத்தம்மாள் 05-04-1934 ஆம் தேதி தாவா 1 வது அயிட்டச் சொத்தை கிரையம் வாங்கியதாகச் சொல்வது பொய் என்றால் சரியல்ல. செல்லத்தம்மாள் அனுபவம் பன்னுவதற்கு ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள அறந்தாங்கி தாலுகா லெட்சுமி நரசிம்மபுரம் என்ற கிராமம் இல்லையென்றால் தாவா சொத்து உள்ள பகுதிக்கு ஆதியில் புதுக்குடியிருப்பு என்ற பெயர் உள்ளது.

16) எந்த வருடம் லெட்சுமி நரசிம்மபுரம் என்ற பெயர் வைத்தார்கள் என்றால் 1959 ல் வைத்தார்கள். எனக்கு தாவா சொத்து எங்கு இருக்கிறது என்றே தெரியவில்லையென்பதால் தான் இல்லாத கிராமப் பெயரை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

17) வா.சா.ஆ. 3 ன் ஆவணத்தின் படி காத்தாயியம்மாள் தாவா 1 வது அயிட்டச் சொத்தை கிரையம் வாங்கியதாகச் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 3 ஆவணத்தில் கண்ட சொத்துக்கும் தாவா சொத்துக்கும் சம்மந்தம் இல்லையென்றால் சரியல்ல. தாவா 2 வது அயிட்டச் சொத்தை ரெத்தினவேல் பிள்ளை மனைவிக்குச் சொந்தம் என்று சொல்வதில் மேற்படி ரெத்தினவேல் பிள்ளை மனைவி பெயர் என்னவென்றால் பத்திரத்தைப் பார்த்தால் தான் சொல்லமுடியும்.

18) தாவா 2 வது அயிட்டச் சொத்தை ரெத்தினவேல் பிள்ளை மனைவி அனுபவத்து வந்ததற்கு ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அதனால் தாவா 2 வது அயிட்டச் சொத்து ரெத்தினவேல் பிள்ளை மனைவிக்கு சொந்தமாக இருந்ததாகச் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

19) வா.சா.ஆ. 4 ஆவணத்தின் படி தாவா 2 வது அயிட்டச் சொத்தை எனது தாய் வழிப்பாட்டி காத்தாயியம்மாளும் அவரது சகோதரி குப்பம்மாளும் கிரையம் வாங்கியதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4 ஆவணத்திற்கும் 2 வது அயிட்டச் சொத்திற்கும் சம்பந்தம் இல்லையென்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4 ல் கண்ட குப்பம்மாளின் கணவர் பெயர் என்ன வென்றால்

பழனியாண்டிப் பிள்ளை சரியாக ஞாபகம் இல்லை.

20) மேற்படி குப்பம்மாள் எப்போது இறந்தார் என்றால் சுமார் 60 வருடம் இருக்கும். குப்பம்மாளின் வாரிசுகள் பற்றிய விபரத்தை என் வழ்க்குரையில் சொல்லவில்லையென்றால் சரிதான். குப்பம்மாளின் வாரிசுகள் யார் என்பது எனக்குத் தெரியாது. குப்பம்மாளும் எனது பாட்டி காத்தாயியும் சேர்ந்து தாவா 2 வது அயிட்டச் சொத்தை கிரையம் வாங்கியதாகச் சொல்லியிருப்பதில் எப்படி தாவா 2 வது அயிட்டச் சொத்து முழுமையும் எனது பாட்டிக்கு சொந்தமானது என்று நான் சொல்லவில்லையென்றால் சரிதான்.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.